DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, COONOOR

**Case No: CC.94/2025**
Prosecution witness **PW.1(LW.1)**

| | | | |
|---|---|---|---|
| Name | : Tr. Mohit Golecha | Caste | : |
| Father Name | : | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |
| Time | : | | |

**(Accused absent. Petition U/s. 355 of BNSS filed and allowed. Respective accused counsel present)**
Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of **19.08.2025**

**19.08.2025 முதல் விசாரணை** :

நான் குன்னூர் மவுண்ட் ரோட்டில் குடியிருந்து எங்களுக்கு சொந்தமான சோகத்தொரையில் உள்ள தேயிலை தோட்டத்தை நான் கவனித்து வருகிறேன்.

1) கடந்த 04.05.2025 – ஆம் தேதி காலை சுமார் 07.00 முதல் 07.30 மணிக்குள்ளாக எங்களது தோட்டத்தில் வேலை செய்ய ஆட்களை கூட்டி வருவதற்காக எங்களுக்கு சொந்தமாக டிஎன் 36 எச் 0230 பதிவெண் கொண்ட பிக்கப் வாகனத்தில் கிளிஞ்சாடாவிற்கு சென்று கொண்டிருந்தபோது சேலாஸை கிராஸ் செய்து ஒரு பெண்ட் அருகில் சென்றபோது எனக்கு எதிர்புறமாக ராங் சைடில் ஒரு பைக்க ஓட்டுநர் அதிவேகமாக வந்து கொண்டிருந்தார். நான் அவரை பார்த்து ஆங்கிலத்தில் Where the hell are you coming என்று சத்தம் போட்டுவிட்டு நான் கடந்து வந்துவிட்டேன்.

2) அந்த பைக் ஓட்டுர் தனது பைக்கை திருப்பி கொண்டு வந்து எனது பிக்கப் வாகனத்தை முந்தி சென்று எனது வாகனத்திற முன்பாக நிறுத்திவிட்டார். என்னை பார்த்து தமிழில் தாயோளி தேவடியா என்று கெட்ட வார்த்தைகளால் திட்டினார். மேலும்

ஒரு கல்லை எடுத்து வந்து எனது வாகனத்தின் பாதி திறந்திருந்த ஜன்னல் வழியாக என்னை குத்திக்கொண்டே இருந்தார். அதில் எனது மூக்கின் மேல் பகுதியில் காயம் ஏற்பட்டு இரத்தம் வந்தது. மேலும் எதிரி என்னை அடித்ததில் எனது கண்கண்ணாடி கீழே விழுந்துவிட்டது. நான் கதவை திறந்து கிழே இறங்கி என் கண்கண்ணாடியை எடுத்த போது எதிரி என்னை பார்த்து நீ இந்த வழியாக வந்தால் உன்னை இதே கல்லால் அடித்து கொன்றுவிடுவேன் என்று கூறி கொலை மிரட்டல் விடுத்தார்.

3) நான் கண்கண்ணாடியை தேடிக்கொண்டிருந்தபோது எதிரி சென்றுவிட்டார். நான் எனது கண்கண்ணாடியை தேடி எடுத்து போட்டுக்கொண்டு அருகில் இருந்த வீட்டில் ஒருவர் இந்த சம்பவத்தை பார்த்துக்கொண்டிருதந்வரை பார்த்து அண்ணா பாருங்கள் இப்படி ராங் சைடாக வந்து என்னை அடித்து விட்டு போய்விட்டார் என்று கூறினேன். எனக்கு அதிகபடியாக இரத்தம் வந்ததால் அவர் வந்து என்னை ஒரு கல்லின் மீது படுக்க வைத்தார் மற்றொருவர் தண்ணியை எடுத்து வந்து எனக்கு குடிப்பதற்கு கொடுத்து பின்பு முகத்தை கழுவிட்டார்.

4) பின்னிட்டு நான் எனது ஓட்டுநரான சேகருக்கு போன் செய்து வரச்சொன்னேன். அவர் வந்து என்னை கொலக்கொம்பை காவல் நிலையத்திற்கு கூட்டிச்சென்றார். எனக்கு அதிக இரத்தப்போக்கு உள்ளதால் போலிசார் என்னை அருகில் உள்ள சுகாதார நிலையத்திற்கு சிகிச்சைக்காக செல்லுமாறு ரெபர் செய்தார்கள். அரசு ஆரம்ப சுகாதார நிலையம் சென்று சிகிச்சை பெற்று மீண்டும் காவல் நிலையம் வந்து எனக்கு தமிழ் தெரியாதால் என்னுடன் வந்த சேகர் அந்த புகாரை எழுதினார். அவர் எனக்கு படித்து காண்பித்தார். அதில் நான் கையொப்பம் செய்து கொடுதத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் கண்டுள்ளது எனது கையொப்பம் தான் . (**அந்த புகார் மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**)

5) எதிரி என்னை அடிக்கப் பயன்படுத்திய கல்லை பார்த்தால் என்னால் அடையாளம் காட்ட முடியும். என்னிடம் காட்டப்படும் கல் தான் அது . (**அந்த கைக்கு**

**அடக்கமான கல் ஒன்று அ.சா.பொ.1 ஆக குறியீடு செய்யபடுகிறது)**. வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்குவிசாரணை :** வாய்ப்பளித்தும் இல்லை.

**மறுவிசாரணை** : இல்லை.

//ஒப்பம்.//அப்துல் சலாம்,
நீதித்துறை நடுவர்,
குன்னூர்.

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, COONOOR

**Case No: CC.94/2025**
Prosecution witness **PW.2(LW.4)**

| | | | |
|---|---|---|---|
| Name | : Tr. Mothilall | Caste | : |
| Father Name | : | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |
| Time | : | | |

**(Accused absent. Petition U/s. 355 of BNSS filed and allowed. Respective accused counsel present)**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of **19.08.2025**

**19.08.2025** **முதல் விசாரணை** :

நான் குன்னூர் மவுண்ட் ரோட்டில் குடியிருந்து சேழகத்தொரையில் உள்ள எங்களது டீ எஸ்டேட்டை கவனித்து வருகிறேன். அசா1 மோகித கோட்ச எனது மகன் ஆவார். வழக்கின் விவரங்கள் எனக்கு தெரியும்.

1) 04.05.2025 – ஆம் தேதி காலை சுமார் 07.30 மணியளவில் எனது மகனான அ.சா.1 மோகித் எங்களது எஸ்டேட்டில் வேலை பார்ப்பதற்காக ஆட்களை ஏற்றி வருவதற்கு எங்களது பிக்கப் வாகனத்தை எடுத்துக்கொணடு கிளிஞ்சடாவிற்கு சென்றார். அன்றையதினம் காலை 11.30 மணியளவில் மோகித் எனக்கு போன் செய்து ஆட்களை கூட்டி வருவதற்கு சேலாஸ் தாண்டி சென்று கொண்டிருந்தபோது இரு சக்கர வாகனத்தில் வந்த ஒருவர் எனது மகனின் வாகனத்திற்கு எதிர்புறமாக வந்து விட்டார் என்றும், ஏன் இப்படி ராங் சைடு வருகிறாய் என்று கேட்டபோது அந்த இருசக்கர வாகனத்தில் வந்தவர் நான் அப்படித்தான் வருவேன் என்று தகாத வாரத்தைகளால் எனது மகனை திட்டியதாகவும், மேலும் கல்லால் முகம் மற்றும் தலையில் அடித்ததாகவும், அதில் தனது கண்கண்ணாடி உடைந்ததாகவும் கூறினார்.

2) மேலும் எனது மகன் வண்டியில் இருந்து இறங்கி கண்கண்ணாடியை எடுத்தபோது அந்த இரு சக்கர வாகனத்தில் வந்தவர் எனது மகனை பார்த்த இனிமேல் இந்த பக்கம் வந்தா உன்னை கொன்றுவிடுவேன் என்று மிரட்டியதாகவும் கூறினார். எனது மகன் கொலக்கொம்பை மருத்துவமனையில் பர்ஸ்ட் ஏய்டு எடுத்துவிட்டு காவல் நிலையம் சென்று புகாரளித்துவிட்டு குன்னூர் அரசு மருத்துவமனைக்கு வந்தார். நானும் குன்னூர் அரசு மருத்துவமனை சென்று எனது மகனை பார்த்தேன். வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்குவிசாரணை :** வாய்ப்பளித்தும் இல்லை.

**மறுவிசாரணை** : இல்லை.

//ஒப்பம்.//அப்துல் சலாம்,
நீதித்துறை நடுவர்,
குன்னூர்.